

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (01.08.2024) சென்னை, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில் "உலக தாய்ப்பால் வாரம் (ஆகஸ்ட் 1 முதல் ஆகஸ்ட் 7 வரை) தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழிப்புணர்வு பதாகையினை வெளியிட்டார். இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், கூடுதல் இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

### 2021 - ஆம் ஆண்டு முதலான 10 ஆண்டு கணக்கெடுப்புடன்

# சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒருங்கிணைப்பீர்!

## மக்களவையில் வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 2 -

நாடு தழுவிய அளவில் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தவும், அதை பத்தாண்டு மக்கட்தொகை கணக்கெடுப்புடன் ஒருங்கிணைக்கவும் நாடாளுமன்ற மக்களவையில் விதி எண் 377 கீழ் திமுகவின் வேலூர் மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுத்தார்.



மக்களவையில் அவர் பேசியது வருமாறு:

மக்கள்தொகைக் கணக்கெடுப்புத் தரவு எப்போதும் நமது நாட்டில் திட்டங்கள் கொள்கை உருவாக்கம் மற்றும் சமூகபொருளாதார மேம்பாட்டிற்கான இலக்கு தலையீடுகளின் அடித்தளமாக இருந்து வருகிறது.

இந்திய சமூகத்தில் சமூக முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை நிர்ணயிப்பதில் சாதி வாரியாக கணக்கீடு செய்வது வரலாற்று ரீதியாக இருப்பதால், அது பற்றிய உண்மைத் தரவுகள் பொதுக் களத்தில் கண்டறிய வேண்டியது அவசியம்.

கடந்த ஒன்பது தசாப்தங்களில் நாட்டின் மக்கள்தொகை மற்றும் சமூகபொருளாதார நிலப்பரப்பு மாறியிருந்தாலும், சமூகத்தின் மிகவும் பின்தங்கிய பிரிவினர், பின்தங்கிய பிரிவினர், பல கடந்தகால கொள்கை நடவடிக்கைகள் இருந்தபோதிலும் தொடர்ந்து பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

எனவே, சமூக நீதி, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் தொடர்பான அனைத்து அழுத்தமான பிரச்சினைகளுக்கும் தீர்வு காண தேசிய அளவில் பொதுவான நிலையான செயல்முறையிலிருந்து பெறப்பட்ட சமகாலத் தரவுகள் திரட்டப்படுவது இன்றியமையாதது.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின், பத்தாண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒருங்கிணைக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். தேசிய அளவில் இத்தகைய ஒருங்கிணைக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு மட்டுமே, சமூகத்தின் சாதி கட்டமைப்பு மற்றும் அதன் சமூகபொருளாதார குறியீடுகளின் பிரதிபலிப்பு பற்றிய விரிவான, நம்பகமான தரவுகளை வழங்க முடியும்.

எனவே, இந்திய ஒன்றிய அரசின் சட்டரீதியான மக்கள்தொகை கணக்கெடுப்பு, முக்கியமாக சாதி தொடர்பான தரவு உள்ளீடுகளுடன், சமூக நீதியை நிலைநிறுத்துவதற்கு பொருத்தமான தளத்தை வழங்க முடியும். இது சான்று அடிப்படையிலான கொள்கையை செயல்படுத்துவதோடு, சமமான மற்றும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்யும்.

எனவே, 2021ம் ஆண்டு முதல் நடைபெறவிருந்த பத்தாண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒருங்கிணைக்க வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.



காஞ்சிபுரம் ஒன்றியம், அய்யங்கார்குளத்தில் நேற்று (1.8.2024) நடைபெற்ற "மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, பயனாளிகளுக்கு முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு அட்டைகள் மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.சுந்தர் ஆகியோர் வழங்கினார்கள். உடன் காஞ்சிபுரம் ஒன்றிய குழுத்தலைவர் திருமதி.மலர்க்கொடி குமார், ஒன்றியச் செயலாளர் க.குமணன், துணைத் தலைவர் திருநாவுக்கரசு மற்றும் பலர் உள்ளார்.

### கர்நாடக நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த தமிழ்நாடு லாரி ஓட்டுநர்கள் குடும்பத்திற்கு நிதி!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு இந்தியன் கனரக வாகன ஓட்டுநர்கள் நலக் கூட்டமைப்பினர் நன்றி!

சென்னை, ஆக.2-

கர்நாடகாவில் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த தமிழக லாரி ஓட்டுநர்கள் குடும்பத்திற்கு தலா ரூபாய் மூன்று லட்சம் நிதியுதவியும் மற்றும் மாரடைப்பில் இறந்த தனியார் பள்ளி வாகன ஓட்டுநர் குடும்பத்திற்கு ரூபாய் ஐந்து லட்சம் நிதியுதவியும் வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்தியன் கனரக வாகன ஓட்டுனர்கள் நல கூட்டமைப்பின் தேசிய கௌரவ ஆலோசகர் பா.ம. முத்துக்குமார் நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4, 50வது வார்டு ரங்கநாதபுரம் சாலை சீரமைப்பு, மின்விளக்கு, மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு பொது மக்கள் அளித்த மனுவின் அடிப்படையில் 4 வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி காமராஜ் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார் உடன் 50 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம் யாகூப்,பகுதி துணை செயலாளர்கள் ஜா.ரவிகுமார், ஆர் செல்வகுமார்,மாநகர வர்த்தகரணி துணை அமைப்பாளர் இரா செல்வகுமார், ஆர் ஜீவன்,பி காளியப்பன்,எஸ் கார்த்திக்,எம் சூர்யா, நவீன்குமார், குருமணி, வட்ட நிர்வாகிகள், கழகத் தோழர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வின் போது உடன் இருந்தனர்.

இந்தியன் கனரக வாகன ஓட்டுனர்கள் நலக் கூட்டமைப்பு அகில இந்திய அளவில் கனரக வாகன ஓட்டுனர்களின் உரிமைகள், வாழ்வாதாரம், மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான மத்திய மாநில மற்றும் தனியார்த் துறையுடன் இணைந்து செயலாற்றி வருகிறது. இந்திய பொருளாதார முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கக் கூடிய துறைகளில் போக்குவரத்து துறை இன்றியமையாததாக இருக்கிறது. அந்தப் போக்குவரத்துத் துறை வளர்ச்சியில் வாகனங்களை இயக்குவதில் ஓட்டுநர்களின் பங்கு முக்கியமானதாகும். கனரக வாகன ஓட்டுனர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக தேசியளவில் இந்தியன் கனரக வாகன நலக் கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது.

கனரக வாகன ஓட்டுனர்கள் பணி என்பது ஒரு சவாலான வேலை.எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பதை யாராலும் கணிக்க முடியாத ஒரு தொழில் இந்த ஓட்டுநர் தொழில். எந்தத் தொழிலையும் விபத்தை கணித்து விடலாம். இந்தத் தொழிலில் எதையும் கணித்து விட முடியாது. அப்படிப்பட்ட ஓட்டுனர்களுக்குஅரசாங்கத்தாலோ முதலாளிகளால் எந்த ஒரு அங்கீகாரமும் கிடையாது. இன்றைக்கு இந்திய போக்குவரத்துத்துறை தொழில் துறை, உற்பத்தி சேவை துறைகள், ஏற்றுமதி இறக்குமதி, வணிகத்துறை மற்றும் கப்பல் போக்குவரத்து துறைகளின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வைப்பதற்கு முக்கிய காரணமானவர்கள் இந்த கனரக வாகன ஓட்டுநர்கள் தான். கனரக ஓட்டுநர்கள் தன் முதலாளிக்கு மட்டுமல்ல கண்ணுக்குத் தெரியாத வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கைக்குரியவராக இருக்கிறார்கள். கொரானா போன்ற அவசர காலத்தில் தங்கள் உயிரை கூட பொருட்படுத்தாமல் பொது மக்களுக்கு அடிப்படை தேவைகளை கொண்டு சேர்ப்பதில் கனரக வாகன ஓட்டுனர்கள் பங்கு முக்கியமானது. இப்படிப்பட்ட ஓட்டுநர்களை காவல் துறை பொதுமக்கள் மற்றும் அரசாங்கம் மதிப்பு மரியாதையோடும் அங்கீகரிக்க வேண்டும் என்பது இந்தியன் கனரக வாகன ஓட்டுநர்கள் நல கூட்டமைப்பின் நீண்டகால கோரிக்கையாகும்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய கனரக வாகன ஓட்டுனர்கள் நல கூட்டமைப்பு தொடர்ந்து கனரக வாகன ஓட்டுனர்கள் விபத்தால் பாதிக்கப்படும் போதும் இயற்கை மரணங்கள் நேரிடும்போது ஆளும் அரசுகளுக்கு கோரிக்கை எடுத்து வந்தோம். அதை நிறைவேற்றும் விதமாக சமீபத்தில் கர்நாடகா மாநிலத்தில் நடந்த நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த கனரக வாகன ஓட்டுனர்கள் குடும்பத்திற்கு தலா ரூபாய் மூன்று லட்சம் நிதியுதவியும் மற்றும் மாரடைப்பில் இறந்த தனியார் பள்ளி வாகன ஓட்டுநர் குடும்பத்திற்கு ரூபாய் ஐந்து லட்சம் நிதியுதவியும் வழங்கியும் அவர்களது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல் செய்தியை தெரிவித்துள்ள தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின்.

தமிழக அரசியல் வரலாற்றில் கனரக வாகன ஓட்டுனர்கள் இறந்த செய்தியை கேட்டு தமிழக முதல்வர் திராவிட தூண் மு.க. ஸ்டாலின் அவர்கள் தான் எங்களது கோரிக்கையை நிறைவேற்றியிருக்கிறார். முதல்வர் அவர்களுக்கு இந்தியன் கனரக வாகன ஓட்டுனர்கள் நல கூட்டமைப்பு நன்றியும் பாராட்டுக்களையும் தெரியப்படுத்தக் கூடிய தருணத்தில் உள்ளோம். இந்தியன் கனரக வாகன ஓட்டுநர்களின் நல கூட்டமைப்பின் சார்பாகவும் ஒட்டுமொத்த கனரக வாகன ஓட்டுனர்களின் சார்பாகவும் முதல்வர் அவர்களுக்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு இந்தியன் கனரக வாகன ஓட்டுனர்கள் நல கூட்டமைப்பின் தேசிய கௌரவ ஆலோசகர் பா.ம. முத்துக்குமார் கூறியுள்ளார்.








177 வது வட்ட தி.மு.க. வேளச்சேரி மேற்கு பகுதி